**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.3191/ஆ5/2025, நாள். /07/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2025–2026 "மகிழ் முற்றம்" மாணவர் குழு – அரசுப் பள்ளிகளில் மாணவர் செயல்பாடுகள் – வழிகாட்டு நெறிமுறைகள் – நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – சார்ந்து

பார்வை

1. மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் எண்.4
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.32841/எம்1/இ1/2025, நாள். 02.07.2025

•••••

2024 – 2025 கல்வியாண்டில் மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்பின் படி, அனைத்து அரசு பள்ளிகளிலும் "மகிழ் முற்றம்" மாணவர் குழு (House System) திட்டம், கல்விசார் / கல்விசாரா செயல்பாடுகளை கல்வி முன்னேற்றத்துடன் ஒருங்கிணைத்து மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024–2025ஆம் கல்வியாண்டிற்கான "வருடத்தின் வெற்றிக் குழு" (House of the Year) EMISஇல் பதிவான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி

- தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் "குறிஞ்சி" மாணவர் குழுவும்,
- மேல்நிலைப் பள்ளிகளில் "முல்லை" மாணவர் குழுவும் 2024–2025ஆம் கல்வியாண்டின் வெற்றிக் குழுக்களாக (House of the Year) தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைமைத்திறன், குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமை இல்லாத ஒற்றுமை போன்ற மதிப்புகளை வளர்க்கும் "மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பு, மாணவர்கள் தங்களின் பள்ளி நிகழ்வுகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு, எதிர்காலத்திற்கான திறன்களை வளர்த்துக்கொள்ள உதவும் ஒரு தளமாக செயல்பட்டு வருகிறது. அத்தகைய மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பின் நோக்கங்கள் பின்வருமாறு

- மாணவர்களின் கற்றல் திறன் மேம்படுத்துதல்
- மாணவர்களின் ஊக்கம் மற்றும் பங்களிப்பை அதிகரித்தல்
- மாணவர்கள் விடுப்பு எடுப்பதை குறைத்தல்
- ஒற்றுமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல்
- அனைத்து மாணவர்களுக்குமான வாய்ப்புகள்
- நேர்மறை நடத்தைகளை வலுவூட்டுதல்
- தலைமைத்துவ பண்பினை வளர்த்தல்
- ஆசிரியர் மாணவர் உறவை மேம்படுத்துதல்

மேற்கூறிய சிறப்பான நோக்கங்கள் கொண்ட திட்டத்தினை 2025–2026 கல்வியாண்டிலும் வெற்றிகரமாக செயல்படுத்திட பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டு நெறிமுறைகளை கவனமாக பின்பற்றி பள்ளிகளில் "மகிழ் முற்றம்" செயல்படுத்திட அரசு தொடக்கப் பள்ளி / நடுநிலைப் பள்ளி / உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

11.07.2025 அன்று ஆசிரியர்கள் மற்றும் மாணவர் தலைவர்கள் பதவியேற்பு விழாவானது இணைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலை (இணைப்பு -2) பின்பற்றி நடத்தப்படுதல் வேண்டும்.

"மகிழ் முற்றம்" கையேட்டில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி பதவியேற்பு விழாவிற்கு முன்னதாகவே மாணவர் குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (School House Teacher Coordinator) மாணவர் குழுவின் பொறுப்பாசிரியர்கள் (House Head Teachers), மாணவர் குழுவின் மாணவர் தலைவர்கள் (House Class Leaders) ஆகியோர் தேர்வு செய்யப்படுதல் வேண்டும். "மகிழ் முற்றம்" கையேட்டினை இந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள (இணைப்பு -1) QR குறியீடு மூலம் பயனாளர்களின் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

பார்வை 2-ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் கவனமாக பின்பற்றி பள்ளிகளில் "மகிழ் முற்றம்" சிறப்பாக செயல்படுத்திட மீள அரசு தொடக்கப் பள்ளி / நடுநிலைப் பள்ளி / உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிகளில் "மகிழ் முற்றம்" குழுக்கள் அமைத்து சிறப்புடன் செயல்படுவதை உறுதி செய்யுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு -

1. பார்வை 2-ன் செயல்முறைகள் நகல்
2. இணைப்பு - 1 QR குறியீடு
3. இணைப்பு - 2 மகிழ் முற்றம் குழு அமைப்பு பதவியேற்பு விழா மாதிரி நிகழ்ச்சி நிரல்
4. மகிழ் முற்றம் கையேடு

07.07.25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் -
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல் -

1. சென்னை -6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட உதவி திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம். (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம் (மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக)
5. பள்ளித் துணை ஆய்வாளர்கள், (முதன்மைக் கல்வி அலுவலகம் / இடைநிலை)
6. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (DC) (மாவட்ட உதவி திட்ட அலுவலர் மூலமாக)